# இமாச்சலில் தசரா திருவிழாவில்

# மோகன கலாசார மையம் அசத்தல்

புதுச்சேரி, அக். 20-

இமாச்சல பிரதேசத்தில் நடந்த தசரா குழு திருவிழாவில் புதுச்சேரி மோகன கலாசார மைய மாணவர்கள் பங்கேற்று அசத்தினர்.

சஞ்சீவி நகர் மோகன கலாசார மையம் சார்பில் கிராமப்புற மாணவ, மாணவியர் களுக்கு கிராமிய நடனம், இசை, ஓவியம், கலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகி றது. கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் இந்த மையத்தில் ஏராளமான மாணவ, மாணவிகள் பங் கேற்று பயன் பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் புதுச்சேரி கலை மற்றும் பண்பாட்டுத்துறை மூலம் மோகன கலா சார மைய குழுவினர் தேர்வு செய்யப் பட்டு, இமாச்சல பிரதேசத்தில் உள்ள குளு மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தனர்.

அங்கு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்ப டும் தசரா திருவிழாவில் இக்குழுவினர் பங்கேற்று வருகின்றனர்.

உலக மற்றும் தேசிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் விதமாக ஏற்படுத்தப் பட்டிருந்த இவ்விழாவில் மோகன கலா சார மைய மாணவர்கள் தமிழ் கலாசார கலைகளாகிய தப்பாட்டம், கோலாட் டம், குச்சியாட்டம், சட்டியாட்டம், ஒயி லாட்டம், கரகாட்டம் மற்றும் ஆப்ரிக்க இசையோடு தமிழ் கலாசார இசையை ஆடிப்பாடி அசத்தினர்.

மோகனம் குழுவினரை, குளு மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி பாராட்டி கவுர வித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை இமாசலச் பிரதேச தசரா கமிட்டி அமைப் பாளர்கள் செய்திருந்தனர்.



இமாச்சலபிரதேசம் குளுமணாலியில் நடந்த பன்னாட்டு நாட்டுப்புற கலை மற்றும் தசரா விழாவில் ஆரோவில் மோகன கலாசார மையத்தினர் கலந்து கொண்டு நாட்டுப்புற இசை நிகழ்ச்சி மற்றும் நடனங்களை ஆடி அசத்தினர்.

Scanned with CamScanner